இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,825 — SEPTEMBER 22, 1916.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws under the Town Schools Ordinance made by the Local Board of Chilaw.]

1906 ம் ஆண்டின் நகரபள்ளிக்கூடச்சட்டத்தின் 7 ம் 8 ம் பிரிவின்படி சிலாபம் நகரசங்கத்தவரால் நியமிக்கப்பட்ட துணைப்பிரமாணங்கள் :—

1. இந்தத் துணைப்பிரமாணங்களில் "ஆண்பிள்ளை பெண்பிள்ளை" பிள்ளை என்னுஞ் சொற்கள் இத்துடன் அணைக்கப்படும் A அட்டவணை எல்லைக்குள் வசிக்கும் ஒரு ஆண்பிள்ளை பெண்பிள்ளை அல்லது ஒரு பிள்ளையைக் கருதுகின்றது.

"தாய் தகப்பன்" என்னும் சொல் பிள்ளையின் பாரக்காரனையும் பாதுகாப்பவரையும் சேர்க்கும்.

"நூற் சட்டம்" என்னும் சொல் தற்போதைக்காக மந்திராலோசனைச் சபையாருடைய யோசனையுடன் மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களால் உதவிபெறும் பள்ளிக்கூடங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நூற்சட்டத்தைக் கருதுகின்றது.

"வரவு" என்னும் சொல் சட்டத்தில் விதிக்கப்பட்ட பிரகாரம் வரவு டாப்பில் பதிந்த முழு வரவைக்கொண்ட தாய் சட்டத்தாற் கூறப்பட்ட காலத்தின் வரவைக் கருதுகின்றது.

"தத்துவத்தார்" என்பது சலாபம் நகரசங்கத்தவரைக் கருதுகின்றது.

"பள்ளிக்கூடம்" என்பது B அட்டவணையில் காணப்பட்ட பள்ளிக்கூடத்தைக் கருதுகின்றது.

பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள் நியாயமான மன்னிப்புகள் என்னுஞ் சொற்கள் 1906 ம் ஆண்டின் கிராம பாடசாலைச் சட்டத்தின் B 8 ம் பிரிவின் (1) B காட்டியிருக்கும் கருத்தைக் கருதுகின்றது. பாடசாலை சோதிப்போர் என்னும் சொல் மாட்சிமைதங்கிய தேசாதிபதி யவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு வித்தியாதரிசியையும் உதவி வித்தியாதரிசியையும் கருதுகின்றது.

2. *பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு வருகுதல்.*—சகல தாய்தகப்பனும் (6) ஆறு வயதுக்குக்குறையாத 12 வயதுக்குக்கூடாத ஒவ்வொரு ஆண்பிள்ளையும், (6) ஆறு வயதுக்குக் குறையாத (12) பன்னிரண்டு வயதுக்குக் கூடாத ஒவ்வொரு பெண்பிளளையும்தவிர முகம்மதிய்யா அல்லது தமிழ் பெண்பிள்ளைகள் 6 வயதுக்கு குறையாமலும் 10 வயதுக்கு கூடாமலும் அப்பிள்ளையின் படிப்புக்கு ஆக போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள் அல்லது நியாயமான மன்னிப்புகள் இல்லாவிடில் அட்டவணையில் விவரிக்கும் ஏதாவது ஒரு பள்ளிக்கு அனுப்பவேண்டியது. பெண்பிள்ளைகள் இரண்டு கட்டைக்கும் ஆண்பிள்ளைகள் 4 கட்டைக்கும் அப்பாலுள்ள பள்ளிக்கூடத்துக்கு அனுப்பக் கட்டுப்பட்டவர்கள் அல்ல.

3. *காலநியமனம்.*—ஒவ்வொரு ஆண்பிள்ளை அல்லது பெண்பிள்ளை அப்படிக்கொத்த வயதான பிள்ளைகளின் கல்வி பயிற்சிக்காக செலுத்தப்படும் முழு நேரமாம்.

4. *வேதம்.*—எப்பொழுதும் இத்துணைப்பிரமாணங்களில் யாதேனும் (*a*) 1906 ம் ஆண்டின் நகரபள்ளிக்கூடச்சட்டத்தின் 9 ம் பிரிவிலுள்ள (*d*) பிரிவினபடி வேத பாடங்களில் விலத்தியிருக்கக்கூடும். (*b*) பிள்ளையினுடைய பெற்றோர் உடைய வேத அனுசரிப்புகளென்று பிறம்பாய் நியமித்திருக்கும் எந்த நாளினும் பள்ளிக்கூடத்துக்கு வருவது அகத்தியமல்ல.

5. *4 ம் தரத்தின் உண்மைப்பத்திரம் கைக்கொண்டிருக்கும் பிள்ளைகளை நீக்குதல்.*—எப்போதும் 10, 12 வயதுக் இடையிலுள்ள ஒரு பிள்ளை சலாபம் நகரசங்கத்தலைவர் அவர்களுடைய திருப்திக்கு அவர் தற்கால நூல் சட்டத்தின்படி நாலாம் தரத்தின் வாசிக்கவும் எழுதவும், கணக்கிலும் தேர்ச்சிபெற்றதாக பள்ளிககூட பரிசோதிப்பவரிடமிருந்து உண்மைப்பத்திரம் கைக்கொண்டிருந்தால் பள்ளிக்கூடத்திற்குப்போக தேள்வையிராது.

6. *குற்றங்களுக்கு தண்டனைகள்.*—இத்துணைப்பிரமாணங்களை அல்லது இதில் எதனையேனும் அனுசரியாத அல்லது அசட்டைபண்ணும் அல்லது மீறும் ஒவ்வொரு பெற்றோர் குற்றச்சாட்டுக்குள்ளானால் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் ரூபா 20 க்கு மேற்படாத தண்டனைக்குள்ளாவார், இன்னும் தொடர்ச்சியான குற்றத்துக்குள்ளானால் ஒவ்வொரு நாளைக்கு 1 ரூபாவுக்கு மேற்படாத தண்டனைக்குள்ளாவார்.

*குறிப்பு.*—பின்வரும் நகர பள்ளிக்கூடச்சட்டத்தின் பகுதிகள் இத்துணைப்பிரமாணங்களின் 1906 ம் ஆண்டின் முதலாம் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறவை.

8 ம் பிரிவின் உட்பிரிவிலுள்ள (1) (*b*) ஒரு தந்தை உதவிபெறுதற்காக பிரசித்த வித்தியாகர்த்தரால் பதியப்பட்ட அல்லது பதிவுசெய்கிறதற்கு ஆலோசனையிருக்கும் அல்லது போதியதும் பொருத்தமுமானதென்று அனுமதிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடத்தில் தன்பிள்ளை சரியாய் வரவாகிறதென்று அத்தாட்சிப்படுத்தினால் அல்லது பிரசித்த வித்தியாகர்த்தரால் போதியதும் பொருத்தமுமானதென்று அதிகாரம்பண்ணககூடிய வேறே ஒழுங்குகளை தன்பிள்ளையின் கல்விபயிற்சிக்கு செய்துவைத்திருக்கிறதாக அத்தாட்சிபண்ணினால், அல்லது தன்பிள்ளை பளளிக்கூடத்துக்கு அவசியமாக போகிறதிலிருந்து விலக்கப்பட்ட பிரசித்த வித்தியாகர்த்தருடைய அதிகாரப்பத்திரம் காட்டினால் தன்பிள்ளையின் கல்விபயிற்சிக்காக போதியதும் பொருத்தமுமான ஒழுங்குபண்ணியிருக்கிறதாக மதிக்கப்படும். அப்படிப்பட்ட பிள்ளையைப் பள்ளிககூடத்துககுபோகப்பண்ணாமல் இருக்கிறதற்காக நியாயமான சாட்டு உண்டு என்று கோட்டாரின் திருத்திக்கு அத்தாட்சிபண்ணினால் அப்பிள்ளையைப் பள்ளிக்குப் போகப்பண்ணாமல் இருக்கிறதற்காக பெற்றோர் குற்றவாளியாகப்பட மாட்

டார்கள். தாய் தகப்பன் தன்பிள்ளை வியாதியால் அல்லது தவிர்க்கவலாத காரணத்தால் பள்ளிக்கூடத்துக்குபோகாமல் நின்றதென்று அத்தாட்சிபடுத்தினால் பள்ளிக்கூடத்துக்குப் போகப்பண்ணமலிருக்க நியாயமான சாட்டுள்ளவனாக மதிக்கப்படும்.

9 ம் பிரிவின் (2) (*d*) வேதத்துக்குரிய பாடங்கள் கொடுக்கப்படும் பள்ளிக்கூடமொன்றை மேற்கூறிய (*a*) என்னும் பிரிவில் செய்யப்பட்ட துணைப்பிரமாணங்களுக்கு அமைவான பள்ளிக்கூடத்தை சவுக்கியசங்கம் திருத்திக்கொள்ளாவிடின் பிரசித்த சுதேசப் பள்ளிக்கூடமெனக் கருதப்பட மாட்டாது.

(*a*) வேதப்படிப்புகள் :—பள்ளிக்கூட காலஅட்டவணையில் நியமித்த நேரத்தில்மாத்திரம் கொடுக்கப்படும்.
(*b*) வேதப்படிப்புகள் பள்ளிக்கூட சமயத்திற்குச்சேர்ந்த மாணுக்கருக்குத்தவிர மற்றசமயத்தாருக்கு பெற்றோர் தடுக்கில் கொடுக்கிறதில்லை.
(*c*) வேதப்படிப்புக்கு சேராத மாணுக்கர் அதற்காக நியமித்த நேரத்தை வேறே படிப்புகளில் செலுத்தலாம்.
(*d*) வேதப்படிப்பு கொடுக்கும் அறையில் தங்கள் பிள்ளைகளிருக்கிறதைப்பற்றி பெற்றோர் தடைசெய்தால் அப்படிப்புகள் கொடுக்கும்நேரத்தில் அப்பிள்ளைகளை வேறேபகுதியில் படிக்கவிட்டிருக்கலாம் அல்லது அந்தநேரத்தில் அவர்கள் சமுகமாயிராமல் இருத்தல் மன்னிக்கப்படும்.
(*e*) இந்தப் பிரிவின் ஓர் பிரதி இங்கிலிஸ், சிங்களம், தமிழ் பாஷைகளில் பள்ளிக்கூடத்தில் விளக்கமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டியது.

மேற்கூறிய துணைப்பிரமாணங்கள் சலாபம் சவுக்கிய சங்கத்தாரால் 1916 ம் ஆண்டு சித்திரைமாதம் 4 ந் திகதி கூடிய கூட்டத்தில் செய்யப்பட்டது.

ஸீ. எச். கொலின்ஸ்,
சங்கத்தலைவர்.

---

"A" அட்சர அட்டவணை.

மேற்கு-கடல்; தெற்கு-ரெப்பிரமாது கோவிலுக்கு போக புதிதாக போடப்பட்ட ரோட்டுக்கு தென் பக்கத்தால் 10 அடிக் கப்பாலுள்ள ஓர் அழவு வழி, அவ்வழி மேற்குப்பக்கமாக கடல் போகமட்டுமுள்ளதும் வருசைநெய்னா முகம்மதுவின் ஆவரம்பிட்டி தோட்டத்துக்கு தெற்கெல்லையுமானதும்; கிழக்கு-வருசை நெயினா முசம்மதுக்குடைய ஆவரம்பிட்டி தோட்டத்தின் கிழக்கெல்லையும், அந்தோனிப் பறுணாந்துவின் தோட்டத்துக்கு தென் கிழக்கு மூலைசார்வாகயிருக்குமழவு வழியு மவ்வழி அதன் கிழககெல்லையால் போகப்படுகின்றது. இன்னமு முன்னேசுரம் ரோட்டுககு தென் பிறத்தியிலிருக்கிற அகல்குஞ்சடப்பணர் குளக்கட்டு, யுவான் அப்புக்குடைய பாலையடி தோட்டத்தின் அகளுக்குக் கிழக்கெல்லையாகவும் ஆவுலெவ்வை மரைககாரின் நெடும்கொட்டுவையென்ற காணியு மக்காணியிலிருந்து வடகிழக்கு மூலை சஞ்சோணிதுரைக்குடைய புளியமரத்தடி தோட்டத்தின் தென் கிழக்கு மூலைவரையிலுமுள்ள அழவுவழி, அத்தோட்டத்தின் கிழக்கெல்லையிலிருந்து உப்போடைக்கு விளுந்திருக்கும் அகாரைக் கருகிலிருக்கிற அழவுவழி; வடக்கு-சலாபம் களப்புவாய்கு அருகாண்மையான வட்டக்களி ஓடை.

---

"B" அட்சர அட்டவணை.

இங்கிலிஸ் பாடசாலை.

| | | | |
|---|---|---|---|
| ரோமான் கதோலிக ஆண்பிள்ளைகளின் பாடசாலை | .. | .. | சலாபம் |
| ஷை பெண்பிள்ளைகளின் பாடசாலை | .. | .. | ஷை |

சுயபாஷை பாடசாலை.

| | | | |
|---|---|---|---|
| ரோமான் கதோலிக ஆண்பிள்ளைகளின் பாடசாலை | .. | .. | சலாபம் |
| ஷை பெண்பிள்ளைகளின் பாடசாலை | .. | .. | ஷை |
| ஷை ஆண் பெண் பாடசாலை | .. | .. | மரவெளி |
| இங்கிலாந்து சபா ஆண்பெண் பாடசாலை | .. | .. | ஷை |

---

[By-laws made by the Local Board of Moratuwa, relating to Latrines.]

1. ஒரு காணியில் இருப்பவன் அல்லது அந்தக் காணிச் சொந்தக்காரன் சங்கத்தலைவரிடத்திலிருந்து எழுத்துமூலமாக உத்தரவு பெறுமல் ஒரு கக்கூசு, குளிக்கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு அந்தக் காணியில் அல்லது அதற்கயலில் உண்டாக்கவும்படாது அல்லது உண்டாக்குவிக்கவும் படாது.

2. (a) 1 ம் பிரமாணத்தின்படி மேற்சொல்லிய உத்தரவுக்கு எழுதிக்கேட்டால், சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு குறித்த விதமான கக்கூசு, குளிக் கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு அல்லாத வேறொரு விதமான கக்கூசும் உண்டாக்காதபடி சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் கட்டளைசெய்தல் கூடும்.

(b) மேலும் அப்படியான கக்கூசு, குளிக கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு உண்டாக்கப்படவேண்டிய இடம் எதுவென்று சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் ஏற்பாடு செய்யப்படும். அந்தக் கக்கூசை, குளிக்கக்கூசை அல்லது வாளிக் ககூசை வேறு இடத்தில் கட்டுகிறதற்கு உத்தரவு கொடுககாமல் விடவும் ஏலும்.

(c) சுக ஆதாரத்தின்பொருட்டு உத்தரவு கொடுககப்படாதென்று சங்கத்தலைவருக்கு அல்லது சங்கத்துக்குத் தோற்றினால் ஒரு வளவுக்குள் துண்டாய் யாதும் கக்கூசு, குளிக கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு உண்டாக்குகிறதற்குச் சங்கத்தலைவர் அல்லது சங்கம் உத்தரவு கொடுககாமல் விடலாம்.

3. (a) உத்தரவு பெறுமல் அல்லது, சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் கொடுபட்ட உத்தரவின் கட்டுப்பாடுகளை யாதும்வகையாய் மீறிக் கட்டுப்பட்ட ஒரு ககூசை, குளிக கக்கூசை அல்லது வாளிக் கக்கூசை அழித்து சங்கத்தலைவரால் அல்லது சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நியாயமான காலத்துக்குள் நிரப்பவேண்டுமென்று அந்த நிலத்தின் சொந்தக்காரனை அல்லது நிலத்தில் இருப்பவனைச் சங்கத்தலைவர் அல்லது சங்கத்தார் எழுத்துமூலமாகக் கட்டளைபண்ணக் கூடும்.

(b) இந்தக் கட்டளைச்சட்டத்தின் (a) பிரிவில் காட்டிய கட்டளையின்படி செய்யாத ஒவ்வொருவரும் குற்றவாளியாவார்.

4. (a) சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விதமாயும், பருப்பமாயும், இடத்திலும், வாய்க்கால்களுள்ளதாயும் ஒரு கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு குறிககப்பட்ட காலத்துக்குள் உண்டாக்கும்படி ஒரு வளவின் சொந்தக்காரனை அல்லது அதில் இருப்பவனை எழுத்து மூலமாகச் சங்கத்தார் கட்டளை செய்யக்கூடும்.

(b) இந்தக் கட்டளைச்சட்டத்தின் (a) பிரிவில் காட்டிய கட்டளையின்படி செய்யாத ஒவ்வொருவரும் குற்றவாளியாவார்.

5. (a) சங்கத்தாரால் ஏற்பாடுபண்ணின மாதிரியாயும் சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காலத்துக்குள்ளும் ஒரு கக்கூசை, குளிக் கக்கூசை அல்லது வாளிக் கக்கூசைத் திருத்த, அல்லது மாற்ற அல்லது திருப்பிக்கட்டும்படி, அல்லது நியமிக்கப்பட்ட காலத்துக்குள் அழித்து நிரப்பும்படி நிலத்தின் சொந்தக்காரனை அல்லது அதில் இருப்பவனைச் சங்கத்தார் கட்டளை செய்யக்கூடும். சங்கத்தாரின் எண்ணத்தின்படி அப்படிப்பட்ட கக்கூசு, குளிக் கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு கட்டினதில் குறைவுள்ளதாயிருந்தால் அல்லது கட்டப்பட்ட உபயோகத்துக்குத் தகுந்ததாய் இல்லாமல் இருந்தால் அல்லது கெட்ட நாற்றம் வரக்கூடியதாயிருந்தால் அல்லது 10 ம் கட்டளைச்சட்டத்தின்படி விடப்பட்ட சுக ஆதார ஒழுங்கையிலிருந்து மலசலம் சுகமாய் எடுக்க ஏலாமலிருந்தால் அல்லது அப்படிப்பட்ட ஒழுங்கைக்கு அருகில் இல்லாவிட்டால் அந்தக் கக்கூசை குளிக் கக்கூசை அல்லது வாளிக் கக்கூசைத் திருத்த, மாற்ற அல்லது திருப்பிக்கட்டச் சங்கத்தாரால் நியமித்த காலத்துக்குள் அதை அழித்து நிரப்பும்படி அந்த நிலத்தின் சொந்தக்காரனை அல்லது அதில் இருப்பவனைச் சங்கத்தார் கட்டளைசெய்யக்கூடும்.

(b) இந்தக் கட்டளைச்சட்டத்தின் (a) பிரிவில் காட்டிய கட்டளையின்படி செய்யாத ஒவ்வொருவரும் குற்றவாளியாவார்.

சொற்களின் கருத்து.

6. கீழே சொல்லப்படும் கட்டளைச்சட்டங்களில் வரும் "குளிக் கக்கூசு" என்னும் சொல்லு, மலசலம் அந்த இடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோகாத மற்றும் விதமான கக்கூசுகள் எல்லாவற்றையும் கருதும். "குறிக்கப்பட்ட விசாலம்" என்னும் சொல்லு, காலத்துக்குக்காலம் சங்கத்தாரால் குறிக்கப்படும் சங்கத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் நிலத்தை அல்லது நிலங்களைக் கருதும். அப்படிப்பட்ட விசாலம் அந்த எல்லைகளுக்குள் இருக்கும் முழு நிலத்தையும் அடக்கும், அல்லது ஒரு பகுதியை அல்லது பகுதிகளை அடக்கும்.

7. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள் அல்லது குறிக்கப்பட்ட விசாலத்தின் ஒரு பகுதிக்குள் இருக்கும் எல்லா விதமான குளிக் கக்கூசுகளையுஞ் சங்கத்தின் தீர்மானத்தால் மூடப்பண்ணிவித்து எல்லாக் கக்கூசுகளும் மலசலம் எடுத்துக் கொண்டு போகக்கூடியதாய் இருக்கவேண்டியதென்று கட்டளைசெய்யக்கூடும்.

8. அப்படிப்பட்ட குளிக் கக்கூசை அல்லது குளிக் கக்கூசுகளை அழித்து மலசலம் எடுத்துக்கொண்டு போகக்கூடிய கக்கூசு அல்லது கக்கூசுகள் உண்டாக்கும்படி சங்கத்தில் தீர்மானித்து அந்த வீட்டின் அல்லது கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரனுக்கு அல்லது அதில் இருப்பவனுக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தால், அந்த அறிவித்தல் கொடுத்த நேரம்தொடங்கி சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காலத்துக்குள் அந்த அறிவித்தலில் காட்டியபடி எல்லாம் அந்த ஆள் அல்லது ஆட்கள் செய்விக்கவேண்டியது. அந்த அறிவித்தலில் காட்டியபடி எல்லாம் நியாயமான காலத்துக்குள் செய்விக்காமல் விடும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதில் இருப்பவனும் குற்றவாளியாவான். இந்தக் கட்டளைச்சட்டத்தின்படி ஒரு கக்கூசு உண்டாக்குகிறதற்கு, 1 ம் கட்டளைச்சட்டத்தில் காட்டியபடி, மாதிரி, இடம் மற்றும் தேவைகள் என்னவென்று சங்கத்தலைவர் நியமிக்கும்படி, சங்கத்தலைவரிடம் உத்தரவு பெறவேண்டும்.

9. ஒரு கக்கூசு அல்லது வாளிக் கக்கூசு இருக்கும் நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதில் இருப்பவன் அப்படிப்பட்ட கக்கூசை அல்லது வாளிக் கக்கூசை நல்ல திருத்தமாயும், துப்பரவாயும் சுக ஆதாரத்துக்கு ஏற்றதாயும் அதால் தீங்குவரக் கூடாததாயும் வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாத ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதில் இருப்பவனும் குற்றவாளியாவான்.

10. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள் இருக்கும் வீட்டின், கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரனை அல்லது அதில் இருப்பவனை 8 அடி அகலத்துக்கு மிஞ்சாத ஒரு ஒழுங்கை சங்கத்தலைவர் தீர்மானித்த இடத்தில் நிலத்துக்குப் பின்னால் அல்லது ஊடாக, மலசலம் செவ்வையாய் எடுத்துக்கொண்டு போகிறதற்காக விட்டு தன்செலவில் வைத்திருக்க வேண்டுமென்று சங்கத்தார் தீர்மானம்செய்து கட்டளைபண்ணுதல் நியாயமுறையாகும்.

11. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள்ளிருக்கும் எல்லா மலசல மெடுக்கும் வேலையும் சங்கத்தாரால் செய்யப்படும். ஒருவரும் தானே அல்லது வேறுஆள்மூலமாக, அல்லது வேலைக்காரன் மூலமாக அல்லது கூலிக்குப்பிடித்த ஆள்மூலமாக அந்த வேலையைச் சங்கத்தலைவரிடம் எழுத்துமூலமாக உத்தரவுபெறுமற் செய்யப்படாது. அந்த இடத்தில் அப்படிப்பட்ட வேலையெல்லாம் சங்கத்தாரால் செவ்வையாய்ச்செய்ய ஏலுமென்று எண்ணினால் சங்கத்தலைவர் அப்படிப்பட்ட உத்தரவைக் கொடுக்காமல் விடலாம்.

12. குறிக்கப்பட்ட விசாலத்துக்குள்ளிருக்கும் கக்கூசுகள் வாளிக்கக்கூசுகளின் சொந்தக்காரர்கள் எல்லாரும் அதில் இருப்பவர்கள் எல்லாரும் மலசலம் எடுத்துக் கொண்டுபோகிறதற்காக மாதத்துக்கு மாதம் சங்கத்தார் நியமித்தபடி பணம் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட பணங்கள் எல்லாம் வேலைசெய்த மாதத்துக்கு அடுத்தமாதம் 10 ந் திகதிக்கு முன் கொடுத்துப்போட வேண்டும். அப்படி கொடுக்காமல்விடில், பாணந்துறை பொலிசு நீதிவான் தான் அடித்த குற்றக்காசுகள் வேண்டுகிற மாதிரியாய் இந்தப் பணத்தையும் வேண்டுகிறதற்கு அதிகாரமுள்ளவராயிருப்பார்.

13. நாட்கூலியாள் தேவையானவர்கள் சங்கத்தாருக்கு எழுதிக்கேட்டால் சங்கத்தார் நியமித்த கட்டுப்பாடுகளின்படி அப்படிப்பட்ட கூலிஆட்கள் கொடுபடும். அப்படிப்பட்ட கூலிஆட்களின் சம்பளம் 12 ம் கட்டளைச்சட்டத்தில் காட்டிய பணம் அறவிடுதல்போல் அறவிடப்படும்.

14. குறிக்கப்பட்ட விசாலத்துக்கு வெளியே இருக்கும் ஆராவது தன்னுடைய கக்கூசில் அல்லது வாளிக் கக்கூசிலிருந்து சங்கத்தார் மூலமாக மலசல மெடுப்பிக்க வேண்டுமானால் அல்லது ஒருநாட்கூலி தேவையானால் அப்படித் தேவையென்று சங்கத்தாருக்கு எழுத்துமூலமாக அறிவித்தால் சங்கத்தார் அப்படிப்பட்ட வேலையைச் செய்விக்கக்கூடும். 12 ம் கட்டளைச்சட்டத்தில் காட்டிய பணத்தைப்போல் இந்தப் பணமும் கொடுபட வேண்டும் அல்லது அதில் காட்டியபடி அறவிடப்படும்.

15. ஒரு வளவில் புதிதாய் ஒரு கக்கூசுத் தண்ணீர் விழும்குழி வெட்டவேண்டுமென்று அல்லது இருக்கும் குழியை மாற்ற அல்லது திருத்த அல்லது புதிதாய் வெட்ட அல்லது நிரப்பவேண்டுமென்று சங்கத்தார் எண்ணினால் கக்கூசுத் தண்ணீர் விழும் ஒரு குழி வெட்டவேண்டுமென்று அல்லது இருக்கும் குழியை மாற்ற அல்லது திருத்த அல்லது புதிதாய் வெட்ட அல்லது நிரப்பவேண்டுமென்று சங்கத்தலைவருடைய கையெழுத்துள்ள எழுத்துமூலமாகச் சொந்தக்காரனுக்கு அல்லது அதில் இருப்பவனுக்குச் சங்கத்தார் அறிவிப்பார். அப்படி அறிவித்ததின்பின் அப்பேர்ப்பட்ட கக்கூசுத் தண்ணீர்விழும் குழியினுடைய இடம், மட்டம் பருப்பத்தைப்பற்றியும் பாவிக்கவேண்டிய சாமான்களைப்பற்றியும் செய்விக்கவேண்டிய மாதிரியைப்பற்றியும் அப்பேர்ப்பட்ட வேலைகளோடுசேர்ந்த வேறு அலுவல்களைப்பற்றியும் உள்ள முறைமைகளை அறிவிப்பார். அப்பேர்ப்பட்ட அறிவித்தல் வாங்கியபின் சங்கத்தார் நியமித்த காலத்துக்குள் சங்கத்தார் அறிவித்தபடி எல்லா வேலைகளும் செய்விக்காமல் விடும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதில் இருப்பவனும் குற்றவாளியாவான்.

16. ஒரு கக்கூசுத்தண்ணீர் விழும் குழிக்குள் அழுக்குத்தண்ணீர் விழுந்து சேர்ந்தால் அந்த குழியிருக்கும் வளவின் சொந்தக்காரனுக்கு அல்லது அதில் இருப்பவனுக்கு அந்தநாள்தொடக்கம் நாள்தோறும் அப்பேர்ப்பட்ட அழுக்குத் தண்ணீரைச் சங்கத்தார் அள்ளுவிப்பார் என்று சங்கத்தலைவர் அறிவிப்பார். அது தொடக்கம் சங்கத்தார் நியமித்தபடி அழுக்குத் தண்ணீரை அள்ளுவிக்கிறதற்கு நியாயமான பணம் அந்த சொந்தக்காரன் அல்லது அதில் இருப்பவன் கொடுக்க வேண்டும். 12 ம் கட்டளைச்சட்டத்தில் காட்டிய பணத்தைப்போல் இந்தப் பணமும் கொடுபடவேண்டும் அல்லது அதிற் காட்டியபடி அறவிடப்படும்.

17. அழுக்குத் தண்ணீர் விழுந்துசேரும் கக்கூசுத்தண்ணீர்விழும் குழியிருக்கும் நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதில் இருப்பவன், 16 ம் கட்டளைச் சட்டத்திற் காட்டியபடி சங்கத்தலைவர் அறிவிக்காமல் விட்டால், அதால் தீங்கு வாரதபடி சங்கத்தலைவர் ஏற்றுக்கொண்ட இடத்துக்கு அப்பேர்ப்பட்ட தண்ணீரை நாளுக்குநாள் கொண்டுபோய் ஊற்றுவிக்கவேண்டும். மேலே சொல்லியபடி அப்படி ஊற்றுவிக்காமல் விடும் ஒவ்வொரு சொந்தக்காரனும் அல்லது அதில் இருப்பவனும் குற்றவாளியாவான்.

---

[By-law made by the Government Agent, Province of Uva, relating to Slaughter of Animals.]

1893 ம் ஆண்டின் இறைச்சிக்காரரைப்பற்றிய 9 ம் இலக்கச் சட்டத்தின் 23 ம் பிரிவின்படி தமக்குள்ள தத்துவங்களைக்கொண்டு அதிகார மந்திரசபையோடுகூடிய உத்தமரு் தேசாதிபதியானவர் ஊவா மாகாணத்திலுள்ள இறைச்சியடிக்குஞ் சாலைகளைப்பற்றியும் மாடடிப்பதற்கென்று நியமித்துள்ள இடங்களைப்பற்றியும் ஊவா மாகாண அரசாட்சி ஏஜென்றுத் துரையாற் செய்யப்பட்டுள்ள மேல்வரும் விதானத்தை அங்கீகாரஞ் செய்திருக்கின்றனரென்பது இஃதால் விளம்பரஞ்செய்யப்பட்டு, அவ்விதானமானது யாவரு மறிந்துகொள்ளுமாறு இஃதாற் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

உத்தமரு் கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1916 ம் ஹு செப்றெம்பர்மீ 15 ந் உ.

முன் குறிக்கப்பட்ட விதானம்.

19. மற்றமிருகங்களின் முன்பாக வைத்து யாது மிருகத்தையும் அறுக்கலாகாது.

---

[By-laws made by the Sanitary Board of Ratnapura relating to erection of Huts, &c.]

1892 ம் ஆண்டின் சிறுபட்டணங்களின் சுகாதாரக் கட்டளைச்சட்டம்.

1892 ம் ஆண்டின் 18 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 9E (2) (o) பிரிவின்படி, இரத்தினபுரி டிஸ்திறிக் சுகாதார சங்கத்தாரால் செய்யப்பட்டு அதிகார மந்திரசபையோடுகூடிய அதியுத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் துணைப்பிரமாணம் சகலரும் அறிந்துகொள்ளும்படி வெளிப்படுத்தப்படுகின்றது.

உத்தமரு் கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1916 ம் ஹு ஆவணிமீ 3 ந் உ.

சொல்லப்பட்ட துணைப்பிரமாணங்கள்.

சுகாதாரசங்கந் தாபிக்கப்பட்டிருக்கும் யாதுமொரு பட்டணத்தின் எல்லைகளினுள்ளே, பின்வருங் கட்டுப்பாடுகளுக் கமைந்தேயல்லாமல், யாதுமொரு குடிசையாவது வீடாவது கட்டுவது திரும்பக் கட்டுவது, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டுவது எவரொருவருக்கும் நியாயமுறையாக மாட்டாது.

எந்த ஒரு குடிசையாவது வீடாவது கட்டப்பட்டால், அல்லது திரும்பக் கட்டப்பட்டால், அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்பட்டால்; அதைச் சுற்றிவர, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்பட்டால் அப்படிக் கட்டப்பட்டதைச் சுற்றிவரக் காற்று நின்றுலாவத்தக்க சுத்தவெளியிடம், பின்சொல்லுகிறபடி விட்டிருக்க வேண்டும். அந்தக் கட்டடத்தின் எந்தப் பாகமாயினும், தாழ்வாரங்கள் இரண்டரை யடிக்கு மேற்படவாவது அந்த வெளியிடத்தினுள் வரவிடப்படாது:—

(1) ஏதுமொரு ஸ்ரேட்டின் அல்லது தெருவீதியின் அருகில், அந்தஸ்ரேட்டின் அல்லது தெருவீதியின் மத்தியிலிருந்து இருபத்தைந்து அடி. தூரத்துக்கு வெளியிடம் விட்டிருக்கவேண்டும்.

(2) பிற்பக்கத்து வெளியிடத்தில் சங்கத்தலைவர் உத்தரவுபண்ணுகிறபடி குசினி, குளிக்குமிடம், அல்லது கக்கூசு அல்லாத வேறேதும் குடிசைக்கு அல்லது வீட்டுக்கு ஐம்பது அடிவரையில் வெளியிடம் விட்டிருக்க வேண்டும். அந்தக் குறித்த இடைவெளியிடத்தில் அரைவாசியாவது வீடு கட்டப்படுகிற, திரும்பக் கட்டப்படுகிற, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்படுகிற வீட்டு நிலமுடையவனுக்கே உரிய சொந்த இடமாயிருக்கவேண்டும்.

(3) (வலது இடது) பக்கத்தில், சங்கத்தலைவர் உத்தரவுபண்ணுகிறபடி, ஆகக்கிட்ட இருக்குங்கட்டடத்துக்குப் பதினைந்து அடிவரையில் இடை வெளியிடம் இருக்கவேண்டும். குறித்த இடைவெளியில் அரைவாசியாவது வீடு கட்டப்படுகிற, திரும்பக் கட்டப்படுகிற அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்படுகிற வீட்டு நிலமுடையவனுக்கே உரிய சொந்த இடமாயிருக்கவேண்டும்.

புறனடை: சங்கத்தலைவர், ஏதேனுமொரு விசேஷ காரியத்திலே, இந்த விதியை வற்புறுத்தாமல் தமது புத்திப்படியே செய்விக்கலாம்; ஆனாலும், அவர் பின்வரும் இரண்டுகாரியங்களிலும் திருப்திப்பட்டுக்கொண்டாலொழிய, அவர் அப்படிச் செய்விக்கப்படாது:—

(1) கட்டப்பட இருக்கிற, திரும்ப கட்டப்பட இருக்கிற, அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கட்டப்பட இருக்கிற வீட்டினது அல்லது குடிசையினது, அல்லது மனிதர் குடியிருக்கிறதற்குப் பாவிக்கப்பட்டு வருகிற அல்லது பாவிக்கப்பட எண்ணப்பட்டிருக்கிற வேறேதுமொரு அயல்வீட்டினது அல்லது குடிசையினது, சுகாதார நிலைமைக்காவது சுக நயத்துக்காவது ஏதேனுமொரு நட்டங்கேடு விளையாமலிருக்கவேண்டும்; அன்றியும்,

(2) ஏதேனுமொரு ஸ்ரேட்டை அல்லது தெருவீதியை இனிமேல் நேராக்குதல், அகலமாக்குதல், அல்லது பெருப்பித்தல், என்பதற்கு, இந்த விதியைக் கவனிக்காமல் ஏதுஞ்செய்தால், அது இடையூறு செய்யாமலிருக்கவேண்டும்.

மேலும் ஓர் புறனடை: ஏதுமொரு வீட்டினது, ஸ்ரேட்டிலிருந்து அல்லது வீதியிலிருந்து அப்பாற்பட்ட பக்கத்தில், காற்று உலாவவிட்டிருக்கிற வெளியிடத்துப்பாகத்திலே சங்கத்தலைவருக்குப் பிரியமானதொரு இடத்தில் குசினி, குளிக்குமிடம், அல்லது கக்கூசு கட்டுவதற்குச் சங்கத்தலைவர் உத்தரவுபண்ணலாம்.

மேலும் ஓர் புறனடை: கக்கூசின் மலசலத்தை அப்புறப்படுத்துவதற்கான ஒழுங்கையை அல்லது முடுக்கைச் சங்கத்தார் ஏற்படுத்தி விடப்பட்டிருந்தால், அல்லது ஏற்படுத்திவிட உத்தேசித்திருந்தால், அந்தக் கக்கூசு அப்படியான ஒழுங்கைக்கு அல்லது முடுக்குக்கு அல்லது உத்தேசித்த ஒழுங்கைக்கு அல்லது முடுக்குக்கு அடுத்திருக்க வேண்டும்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Ja-ela, Colombo District.]

1876 ம் ஸ்ரூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஜாயெலை றெஸ்ட் ஹவுசின் முற்றத்தை பெருப்பிக்கிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 16,355. குறிச்சி—ஜாயெள.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடகயாகாஹாவத்த .. | 30-40 வயது உள்ள தென்னை 33, 1-2 வயது உள்ள தென்னை 30 உள்ள காணி | மொறடுவையில் இருக்கும் மிஸ்டர் ஜேகொப் டீ. மெள் .. | 0 | 1 | 28·20 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1916 ம் ஸ்ரூ ஒக்றோபர்மாசம் 16 ந் தேதியிலன்று 12 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1916 ம் ஸ்ரூ செப்டம்பர்மீ 15 ந் உ.

ஜே. ஜீ. பிறேசர்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Ja-ela, Colombo District.]

1876 ம் ஸ்ரூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஜாயெள பட்டணத்தைப் பெருப்பிக்கிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 16,316. குறிச்சி—ஜாயெள.

| இல. | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| | காணியின் பெயர்—மிககாவத்தை. | | | | |
| 1 | 20 க்கும் 30 க்கும் இடையாய் வயதுள்ள 6 தென்னைகளும், 4 தென்னம்பிள்ளைகளும், ஒரு ஓலை வேயப்பட்ட குடிசையு மடங்கிய தோட்டம் | எம். யூசே பெரரா .. | 0 | 0 | 9·62 |
| | காணியின் பெயர்—கிக்ககாவத்தை. | | | | |
| 2 | 4 முதிய தென்னைகளும், மூன்று ஓலை வேயப்பட்ட குடிசைகளும் ஒரு ஓடு போடப்பட்ட குடிசையு மடங்கிய தோட்டம் | எல். கென்டிறிக்பேனுண்டோவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 17·88 |
| 3 | 24 முதிய தென்னைகளும், 13 தென்னம்பிள்ளைகளும், 10 கமுகு மரங்களும், ஒரு ஓலை வேயப்பட்ட குடிசையு மடங்கியதோட்டம் | டப்ளியு. ரோறிஸ் சமரனாயக்கவும் மற்றவர்களும் .. | 0 | 1 | 23·12 |
| | காணியின் பெயர்—கொங்ககாவத்தை அல்லது கிக்ககாவத்தை. | | | | |
| 4 | 44 முதிய தென்னைகளும், 20 தென்னம்பிள்ளைகளும், 25 கமுகுமரங்களும் அடங்கிய தோட்டம் | எச். நோவெட் பொன்சேகா .. | 0 | 1 | 39·90 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருககிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1916 ம் ஸ்ரூ ஐப்பசிமாசம் 16 ந் தேதியிலன்று 12 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1916 ம் ஸ்ரூ பிரட்டாதிமீ 15 ந் உ.

ஜே. ஜீ. பிறேசர்,
அரசாட்சி ஏசண்டு, மேல்மாகாணம்.

---

[Dondra East, Matara District.]

1876 ம் ஸ்ரூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெவுன்தறை சுகத்துக்குரிய சங்கத்தின் கணக்கில் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 10,299. குறிச்சி—தெவுந்தற கிழக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | பெ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வாடியேவத்த .. | தென்னை .. | எஸ். என். முகம்மது மவ்லானு .. | 0 | 0 | 22·23 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 17·96 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 12·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876-ம் ஸ்ரூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1916-ம் ஸ்ரூ ஒக்டோபர்மாதம் 23 ந் தேதியிலன்று 2 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1916 ம் ஸ்ரூ செப்டெம்பர்மீ 14 ந் உ.

டீ. ரீட்,
அரசாட்சி உப ஏசண்டு.

# PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Kurunegala Notice No. 5,983.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஸ்ரீ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்துக்குள் 1897 ம், 1899 ம் 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியால காற்பத்தைச்சேர்ந்த மகாகல்பொட எகொட கோறளையில் மலகொமுவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, 28 பேட்சு விசாலமுடையதும் 2,028 ம் பிரதமபடத்தில் R 1,040½ ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் ஞேரூட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதுமான காணி. இதற் கெல்லைகளாவன: வடக்கு-முடியினால் விற்கப்பட்ட கோங்காமுலகேன (299,520 ம் உ. ப. ல். காணும் காணி); கிழக்கு-முடியினால் விற்கப்பட்ட கோங்காமுலகேன (299,520 ம் உ. ப. ல். காணும் காணி), பிற்றஎல (ஞேரூட்டு); தெற்கு-முடியினால் விற்கப்பட்ட கோங்காமுலகேன (299,520 ம் உ. ப. ல். காணும் காணி), தென்னக்கோன் முதியான்செலாகே டிங்கிரிபண்டா கோறளை உரித்தாடும் நககாமுலவத்த; மேற்கு-முடியினால் விற்கப்பட்ட கல்கதுறுகாமுலகேன (299,276 ம் உ. ப. ல். காணும் காணி), மெதகம கிராம எல்லை, (ஞேரூட்டு)

*இங்கிலீசின் நான்காம் பாகம் 869 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Kurunegala S. O. 81—1916.]

---

[Anuradhapura Notice No. 5,984.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஸ்ரீ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரி. ஜி. உவில்லெற் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமகது உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரி. ஜி. உவில்லெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்தை கடவத்கோறளையைச்சேர்ந்த அநுத்கடவத்துளானையில் நெலுகொல்லாவ வென்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, 2 ஏக்கர் 1 பேட்சு விசாலமுடையதும் 637 ம் பிரதமபடத்தில் 1F ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் அந்தரகெலே யென்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. இதற் கெல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கோங்காகேன; கிழக்கு-மகாதியுல்வெவக் கிராம எல்லை; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கெலம்பகாகேன; மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட நெலுகொல்லாவவெவ (குள்மும் குளக் கட்டும்).

*இங்கிலீசின் நான்காம் பாகம் 870 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Anuradhapura S. O. 80—1916.]

---

[Anuradhapura Notice No. 5,985.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஸ்ரீ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் தேதி துவக்கம் மூன்றுமாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரி. ஜி. உவில்லெற் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரி. ஜி. உவில்லெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்தை கடவத்கோறளையைச்சேர்ந்த கந்துதுளானையில் அங்குணச்சியயென்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, 1 ஏக்கர் 2 றூட் 4 பேட்சு விசாலமுடையதும், 570 ம் பிரதமப்படத்தில் 3E ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் அங்குணச்சிய முகலான வென்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய அங்குணச்சியமுகலான; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட அங்குணச்சிய முகலான; தெற்கு-முடியால் விற்கப்பட்ட அங்குணச்சிய முகலான (309,806 ம் உ. ப. ல் காணும் காணி); மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட அங்குணச்சிய முகலான.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 870 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Anuradhapura S. O. 81—1916.]

[Anuradhapura Notice No. 5,986.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஹூ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரி. ஜி. உவில்லெற் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரி. ஜி. உவில்லெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்தை-கெந்தேக்கோறளையைச்சேர்ந்த இகாலகெந்தேதுளானையில் கோனபெற்றியாவ வென்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, 3 ஏக்கர் 38 பேர்ச்சு விசாலமுடையதும் 608 ம் பிரதமபடத்தில் 8 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் வீரகாமுகலான வென்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-253,251 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கும் தெற்கும்-பாழ்நிலக்கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கோனபெற்றியாவமுகலான (திஸ்பம்பவுக்குச்சேமிக்கப்பட்ட நிலம்); மேற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட கோனபெற்றியாவமுகலான (திஸ்பம்பவுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்), 277,501 ம் உ. ப. ல் காணும் காணி.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 871 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Anuradhapura S. O. 82—1916.]

---

[Anuradhapura Notice, No. 5,987]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஹூ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரி. ஜி. உவில்லெற் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரி. ஜி. உவில்லெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின்-விபரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்தை கடவத்கோறளையைச்சேர்ந்த கந்துதுளானையில் எற்றக்கட வென்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 627.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 24 .. | எற்றக்கடலந்த .. .. .. .. | 1 2 35 |

எல்லைகளாவன: வடக்கு-156,354 ம் உ. ப. ல் காணும் காணியின் பகுதி; கிழக்கு-பெறுமதியின் அரைவாசி விலைக்குக் கொடுக்கப்பட்ட அக்கரவெல (319,528 ம் உ. ப. ல் காணும் காணி); தெற்கு-முடிக்குரிய எலகடலந்த; மேற்கு-கலிகும்புக்கொல்லாவக் கிராம எல்லை.

II.—பிரதமபடம் 627.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 29B .. | மொறமுகலான .. .. .. .. | 2 1 23 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும்-முடிக்குரிய மொறமுகலான.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 871 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

[Anuradhapura S. O. 83—1916.]

---

[Anuradhapura Notice No. 5,988.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஹூ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்துக்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரி. ஜி. உவில்லெற் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரி. ஜி. உவில்லெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்தை கடவத்கோறளையைச்சேர்ந்த கந்துதுளானையில் மொறகொட வென்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, 2 ரூட் 30 பேர்ச்சு விசாலமுடையதும் 641 ம் பிரதமபடத்தில் 11C ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் மீகாலந்த (றோட்டத்திற்குச் சேமிக்கப்பட்ட நிலம்) வென்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டு வருவதுமான காணி. எல்லைகளாவன: வடக்கு-253,094 ம் உ. ப. ல் காணும் காணி, 250,957 ம் உ. ப. ல் காணும் காணி; கிழக்கும் தெற்கும்-மகாஎல; மேற்கு-முடிக்குரிய மொறகொட்முகலான, பத்துகமஎல.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 872 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Anuradhapura S. O. 84—1916.]

[Anuradhapura Notice No. 5,989.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஹூ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரி. ஜி. உவில்லெற் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமதுகைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரி. ஜி. உவில்லெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பளாத்தை காந்தாகோறளை இகாலகந்து துளானையைச்சேர்ந்த கோங்கொற்றுப் பொத்தானை யென்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டு :—

பிரதமபடம் 607.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 5F | மாமொறதோட்டமூகலான | 1 1 21 |

எல்லைகளாவன : வடக்கு-மல்லாமி வெல்விதானையும் மற்பேரும் உரித்துச்சொல்லும் புராணவெல ; கிழக்கு-முடியால் விற்கப்பட்ட மாமொறதோட்டமூகலான ; தெற்கு-பாணிலச்சட்டத்தின்கீழ் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப் பட்டிருக்கும் மாமொறதோட்டமூகலான ; மேற்கு-221,311 ம் உரிமைப்படத்தில் கண்டிருக்குங் காணி.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 872 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Anuradhapura S. O. 85—1916.]

---

[Anuradhapura Notice No. 5,990.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1916 ம் ஹூ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம்ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரி. ஜி. உவில்லெற் துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத்தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரி. ஜி. உவில்லெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்தை கெந்தேக் கோறளையைச்சேர்ந்த இகாலகெந்தே துளானையில் பினேகமவென்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே, 2 றூட் 20 பேட்சு விசாலமுடையதும் 599 ம் பிரதமபடத்தில் 22A ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் வயல் (169,721 ம் உ. ப. ல் காணும் காணியுடன் கூட்டப்பட்ட நிலம்) என்னும் பெயரினால் அழைககப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட சேனைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட குளக்கட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்; தெற்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட சேனைகுச் சேமிககப்பட்ட நிலம்; மேற்கு-231,181, 169,721 ம் உ. ப. ல் காணும் காணி.

* இங்கிலீசின் நான்காம் பாகம் 873 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

[Anuradhapura S. O. 86—1916.]

---

[Colombo Notice No. 5,991.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1916 ம் ஹூ (செப்றெம்பர்) புரட்டாசிமீ 22 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கந்தோரில் மேல்மாகாணம் கொழும்பு-நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரியன அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஆர். எச். வையிற்கோன்,
கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசன்று.

சொல்லப்பட்ட நிலங்களின் விபரம்.

மேல்மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் கேவகம்கோறளை மெடபற்று பின்னவல என்னும் கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதியில்* காட்டியபடி கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதமபட இலக்கம் 15,321.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 4888 | ராசபொலலந்த | 0 0 29 |
| 4888½ | ஷை | 0 0 19 |
| | | 0 1 8 |

எல்லைகளாவன : வடகிழக்கு-199,098 ம் நிலப்படத்தில் காட்டிய நிலம் ; கிழக்கு-பீ. ஏ. சாடியலாலும் மற்றவர்களாலும் உருத்தாடப்பட்ட பான்விலகும்புற ; தென் கிழக்கு-கன்சபாவ ரேட்டிலிருந்து லபுகமவுக்குப்போகும் ரேட்டு ; மேற்கு-ஊறுகலவிலிருக்கும் கமாலற்கே டொன் டாவித்தாலும் டிட்டேனியாவிலிருக்கும் வெலிகலகே டொன் கென்டிறிக் அப்புகாமியாலும் உருத்தாடப்பட்ட ராசபொலலந்த ; வடமேற்கு-188,978 ம் நிலப்படத்தில் காட்டியிருக்கும் நிலம்.

*இங்கிலீசின் நான்காம் பாகம் 873 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[Closure of Area for Application Surveys of Crown Lands, North-Central Province.]

வடமத்திய மாகாணத்தில் முடிக்குரிய காணிகளை விலைக்கு வாங்க அளப்பதற்குக் கேள்விப்பத்திரம் போடவேண்டிய பிரிவுகளின் விபரம்:—

1. இத்தால் சகலரு மறியவேண்டியது முடிக்குரிய காணிகளை விலைக்கு வாங்குவோர் கேள்விப்பத்திரங்கள் பின்னால் காட்டிய முறையே கவனிக்கப்படும்.

2. மாகாணம் இக்காரியத்தை நடத்த மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

முதலாம் பிரிவு.—குஞ்சுற்று, கல்பே, மகாப்பொற்ருனை, கனடற, உட்டியான்குலமா, கோறளைகள்.

இரண்டாம் பிரிவு.—உலகல்லை, காலகம், நேகம்பக, உண்டுறுவா, கிருலாவ, மாமினியா, மாதம்புவா கோறளையும் தமன்கடுவாவும் எகொடபற்றுக்களும்.

மூன்ரும் பிரிவு.—விலாச்சிய, நுவரகம், கடவற், எப்பவலவும், கென்டெக்கோறளைகளும்.

3. பிரிவு இலக்கம் 2.—மூடப்படும். 1916 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 1 ம் திகதி. இந்தப்பிரிவுகளின் வரும் காணிகளுக்குக் கேள்விப்பத்திரங்களை மேற்சொல்லிய திகதிக்குள் அனுப்பவேண்டும். ஆனால் காணி விற்கிறதற்கு யாதும் தடை இருக்குமோ என்பதை அறிதற்கு கேள்விப்பத்திரங்களை அனுப்புவதை மேற்சொல்லியது தடைபண்ண மாட்டாது.

4. மூடப்படும் மற்றப்பிரிவின் இலக்கம் 3. அதற்கடுக்க மூடப்படும் பிரிவின் இலக்கம் 1.—இந்த இரண்டு பிரிவுகளுக்குள்வரும் கேள்விப்பத்திரங்கள் சுறுக்க னுப்பவேண்டும்.

5. பிரிவு இலக்கம் 3.—மூடப்படும் திகதி சில நாட்களில் பிரசித்தம்பண்ணப்படும் அந்தத் திகதியில் இலக்கம் 2 பிரிவில் இருக்கும் வேலைகள் முடிந்ததென் றடையாளமாயிருக்கும்.

எச். ஆர். பிரீமன்,
கொவர்ணமேன்று ஏசன்று,
வடமத்திய மாகாணம்.

1916 ம் ஞு புரட்டாசிமீ 9 ந் உ.

# UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக் குட்படாதவர்களின் அறிவித்தல்.

[P. Jakolis Perera.]

இன்றைக்கிருந்து மூன்று மாதத்தின்பின் சியஞ் கோறலே மெதபத்துவே நெதுன்கமுவிலுள்ள பன்டுவாவல கன்கானமலாகே ஜகொலிஸ் பெரேரு வாகிய நான் 1907 ம் ஆண்டின் முதலாம் நம்பர் எட்டாம் பிரிவின் பிரகாரம் றெஜிஸ்றிருர் ஜெனருல் அவர்களுக்கு என்னை கொழும்பு பிரிவில் சிங்கள பாஷையில் நொத்தாரிஸ் பணிவிடைபார்க்க விரும்பி விண்ணப்பம்செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

பீ. ஜகொலிஸ் பெரேரு.

கெந்தும்கமுவ,
1916 ம் ஆண்டு பிரட்டாசிமீ 4 ந் உ.

---

[K. Kithuru Mohammado Marikar Pulavar.]

மன்னார் சோனகத்தெரு கப்பநெயினுமரைக்காயர் கிதுருமுகம்மது மரைக்காயர் புலவராகிய நான் இன்றுதொடக்கம் மூன்றுமாசத்தின்பின் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 6 ம் பிரிவுக்கடக்கமாக மன்னார் டிஸ்திறிக் முசலி நாளுட்டான்பத்து பிரசித்த நொத்தாரிசுவேலைச் சோதினைக்கு போகிறதற்கு றெஜிஸ்டார் ஜெனறலிடம் உத்தரவுகேட்கிறதற்கு எண்ணமாயிருக்கிறேன் என்பதை அறியத்தருகிறேன்.

க. கிதுருமுகம்மது மரைக்காயர் புலவர்.

மன்னார்,
1916 ம் ஆண்டு புரட்டாதிமீ 1 ந் உ.

---

[D. P. Kodituwakku.]

இன்றைக்கு மூன்று மாதத்தின்பின் காலி நகரத்தின் நாலு கிருவெற்குட்பட்ட கும்பல்வெல்லவிலுள்ள டெறிக் பௌலிஸ் கொடித்துவக்குவாகிய நான் 1907 ம் ஞு முதலாம் நம்பர் எட்டாம் பிரிவின் பிரகாரம் றெஜிஸ்திருர் ஜெனறல் அவர்களுக்கு என்னைக் கொழும்புப் பிரிவில் சிங்கள பாஷையில் நொத்தாரிஸ் பணிவிடைபார்க்க விடும்படி விண்ணப்பம்செய்ய எண்ணியிருக்கிறேன் எனபதை இத்தா லறிவிக்கிறேன்.

டி. பி. கொடித்துவக்கு.

கும்பல்வெல்ல,
1916 ம் ஞு புரட்டாதிமீ 11 ந் உ.

H. M. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.